# வலசை புதினம் காட்டும் சூழலியலும் மக்கள் வாழ்வியலும்

# The Ecology and People’s Lives of the Valasai Novel

***இரா. மீனாட்சி***
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

**R. Meenakshi**
*Research Scholar, Department of Tamil*
*Nallamuthi Gounder Mahalingam College*
*Pollachi*

## ஆய்வுச் சுருக்கம்

*மக்களுடைய பிரச்சினைகளைக் கருவாக அமைத்துக் கொண்டு அப்பிரச்சினைகளின் நடுவில் வாழ்ந்து காட்டும் மக்களின் செயல், ஆளுமை, உணர்வு ஆகியவற்றை வெளிக்கொணர்வதில் ஒவ்வொரு படைப்பாளருக்கும் தனித்தன்மை உண்டு. சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட படைப்பாளர்கள் அச்சமுதாயத் திலிருந்து பெறப்பட்ட கருத்துக்களைக் கருவாக்கி, கதையாக்கிப் படைத்துவிடுகின்றனர். தற்காலத்தில் சிறுகதை மற்றும் புதினம் ஆகிய இலக்கிய வடிவங்கள் சமகாலத்தை வெளிப்படுத்துவதில் சிறந்திலங்குகின்றன. அதிலும் புதினம் பிரச்சினையை முன்வைப்பதோடு அதனால் ஏற்படும் விளைவுகள் சமூக மாற்றங்கள் இவற்றையும் வாசகர்களுக்கு எடுத்துரைக்கின்றன. சு.வேணுகோபால் அவர்களின் வலசை புதினம் காடுகளின் சூழலியல் குறித்தும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலையும் முன் வைத்துள்ளது. அவற்றை எடுத்துரைத்து விளக்குவதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *வலசை புதினம், சூழலியல், புதினம், சு.வேணுகோபால், வாழ்வியல்*

## Abstract

*Every creator has a uniqueness in bringing out the actions, personality, and consciousness of the people who conceive the problems of the people and live in the midst of them. Creators who care about the society conceive the ideas derived from that society and make them into stories. Nowadays, literary forms such as short stories and novels excel in expressing contemporary life. In particular, the novel presents the problem and the consequences of it and the social changes. S. Venugopal’s novel Valasai is about the ecology of forests and the lives of the people living there. The purpose of this paper is to explain them.*

***Keywords:*** *Valasai, Ecology, Novel, S.Venugopal.*

**Citation**

Meenakshi, R. “The Ecology and People’s Lives of the Valasai Novel.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 50–57.
DOI: *https://doi.org/10.5281/zenodo.20135465*

*மக்களுடைய பிரச்சினைகளைக் கருவாக அமைத்துக் கொண்டு அப்பிரச்சி நடுவில்னைகளின் வாழ்ந்து காட்டும் மக்களின் செயல், ஆளுமை, உணர்வு ஆகியவற்றை வெளிக்கொணர்வதில் படைப்பாள கொண்டகள் அச்சமுதாயத்திலிருந்து பெறப்பட்ட கருத்துக்களைக் கருவாக்கி, படைத்துவிடுகின்றனர். தற்காலத்தில் சிறுகதை மற்றும் புதினம் ஆகிய இலக்கிய வடிவங்கள் சமகாலத்தை வெளிப்படுத்துவதில் சிறந்திலங்குகின்றன. அதிலும் புதினம் பிரச்சினையை முன்வைப்பதோடு அதனால் ஏற்படும் விளைவுகள் சமூக மாற்றங்கள் இவற்றையும் வாசகர்களுக்கு எடுத்துரைக்கின்றன. சு.வேணுகோபால் அவர்களுக்கு களின் வலசை புதினம் காடுகளின் சூழலியல் குறித்தும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலையும் முன் வைத்துள்ளது. அவற்றை எடுத்துரைத்து விளக்குவதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

**சூழலியல்**

*மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அவனைச் சுற்றி நடக்கின்ற யாவும் சுற்றுச்சூழலோடு தொடர்களுக்கு புடையது. ஒவ்வொரு உயிரினத்திற்கும் இடையேயுள்ள உறவு நிலைகளைப் பற்றி எடுத்துரைப்பதே சூழலியல் எனலாம்.*

*சூழலியல் குறித்து விக்கிப்பீடியா இணையப்பக்கத்தில், சூழலியல் என்பது உயிர் வாழ்க்கையிள் பரவல் பற்றியும் உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான இடைவினைகள் பற்றியும் அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையாகும்* (https://rb.gy/jmmav) *எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சுற்றுச்சூழல் பாதிக்கும்பொழுது அங்கு வாழும் உயிரினங்களும் பாதிக்கப்படும் என்பது புலனாகிறது. அத்தகைய சூழல் பாதிப்புகளால் மாற்றங்களால் மனிதனுக்கும் விலங்குகளுக்குமான மோதல்கள் பற்றி வலசை என்னும் இப்படைப்பு எடுத்துரைக்கிறது.*

**வலசை**

*வலசை என்பது இருவேறு இடங்களுக்குத் திரும்பத் திரும்பச் செல்லுதல் என்னும் விளக்கத்தை அகராதிகள் குறிப்பிடுகின்றன. இப்போதெல்லாம் ‘வலசை’ என்ற சொல் பெரும்பாலும் பறவைகள் தொடர்பாகப் பயன்படுத்தப்படுகிறது. மனிதர்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் குடியேறுவதற்கு தான் வலசை என்று பழந்தமிழில் பெயர். காலப்போக்கில் பொருள் சற்று மாறி பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் தொடர்பான சொல்லாக வலசை ஆகிவிட் டது (இந்து தமிழ் திசை - 06ஜூன், 2017) என்னும் கருத்தின் வழி வலசை குறித்த விளக்கத்தை அறியமுடிகிறது.*

**யானையின் வலசைப் பாதை**

*யானைகள் ஒரு புதிய காட்டையே உருவாக்கும் இயல்புடையவை எனலாம். தனக்கு வாழ்வளிக்கும் காட்டை பாதுகாக்கவும் செய்கின்றன. இந்தியாவில் மட்டும் யானையின் வலசைப் பாதைகள் 101 இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இந்தப் பாதைகள் இன்றும் 70 சதவிகிதம் யானைகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 74 சதவிகிதப் பாதைகள் யானைக் கூட்டம் செல்வதற்கே துன்பப்படும் அளவிற்கு ஒரு கிலோமீட்டருக்குக் குறைவாக சுருங்கி விட்டன. மனிதனுடைய சுற்றுச்சூழல் சார்ந்த அறிவின்மையையும், அக்கறையின்மையையும் இந்தப் பாதை அழிப்பு காட்டுகிறது* (https://shorturl.at/joEK8) *என்ற*

*குறிப்பின் வழி யானைகளின் பயணப்பாதை தடைபட்டுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் "யானையின் உணவு பட்டியலிலே 83 வகைத் தாவரங்கள், 59 வகை மரங்கள், 23 வகை புற்கள் என இத்தனையும் தேடித்தேடி உண்ணும். இவை கிடைக்கும் இடத்தை மனதில் வரைபடமாக வரைந்து கொண்டு தம் கூட்டத்தோடு அந்த பாதையிலே பயணம் செய்யும். அந்தப் பாதைக்கு பெயர் தான் வலசைப் பாதை" எனவும் மனிதர்களுக்கான எச்சரிக்கையாக, "யானை மரணித்தால் காடு மரணிக்கும்! காடு மரணித்தால் நிச்சயம் மனிதன் மறைந்து போவான் (விஜய்குமார், பேச்சாளர், தமிழ் பேச்சு எங்கள் மூச்சு) என்னும் கருத்தின் மூலம் யானைகள் இயற்கைக்குச் செய்யும் பங்களிப்பு குறித்து அறியமுடிகின்றது.*

**மக்களின் ஆக்கிரமிப்பு**

*மனிதன் தான் செய்யக்கூடாத செயலைச் செய்வதால் கேட்டினை அடைவான் என்று வள்ளுவம் கூறுகிறது. ஒருவன் தனது நிலைமைக்குத் தகாத செயல்களைச் செய்வதாலும், செய்யத்தக்க செயல்களைச் செய்யாது விடுவதாலும் கேடு அடைவான் என்பதை*

***"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க***
***செய்யாமை யானும் கெடும்"*** ***(குறள் : 466)***

*என்று வள்ளுவர் கூறியமை நோக்கத்தக்கது. இங்கு வலசை நாவலில் மக்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஆக்கிரமித்து அவற்றை தாம் வாழும் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றிக் கொண்டமை குறித்தும் மனித விலங்கு மோதல் குறித்தும் புதின ஆசிரியர்பதிவு செய்துள்ளார்.*

**மக்களின் பிரச்சினைகள்**

*மலைப்பகுதியில் ஏற்பட்ட ஆக்கிரமிப்பு காரணமாக யானைகள் தங்கள் வழித்தடங்களை மறந்து, மக்களின் குடியிருப்புகளுக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் புகுந்து விடுகின்றன. யானைகள் இரவு நேரங்களில் நிலங்களுக்குள் புகுந்து விளைச்சலையே நாசமாக்கி விட்டுச் சென்று விடும். இதனால் இரவு நேரங்களில் நீர் பாய்ச்ச செல்வோர் படும் துன்பம் பல. பதினாறு பதினேழு வயது மதிக்கத்தக்க ஒரு யானையால் கொல்லப்பட்ட பழனியாண்டி என்ற விவசாயியின் இறப்பு இந்நாவலில் ஆசிரியரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்நபரின் இறப்பு அவ்வூர் மக்களின் மனத்தில் யானைகள் குறித்தான பெரும் அச்சத்தை ஏற்படுத்தியதை வெளிப்படுத்தியுள்ளார்.*

*யானைகள் மட்டுமன்றி காட்டுப் பன்றிகளாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இரவு நேரங்களில் காட்டுப் பன்றிகள் நிலங்களுக்குள் புகுந்து கிழங்குகளைத் தேடி நிலத்தையே நாசம் செய்து விட்டுச் சென்று விடும்.*

*பன்றிகளை வேட்டையாடவும் முடியாது. அது குற்றச் செயலாகக் கருதப்படுகிறது. அக்குற்றத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதோடு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகிறது.*

**பாதுகாக்கும் முறையால் சூழல் பாதித்தல்**

*விவசாயிகள் யானைகளின் வருகையைத் தடுக்க தமக்கென சில வழிகளைப் பின்பற்றிய ய்திகள் இந்நாவலில் இடம்பெற்றுள்ளது.*

*விவசாய நிலங்களைச் சுற்றிலும் மின் கம்பிவேலி அமைத்தல், உணவுப்பொருட்களில் விஷக்கொல்லி மருந்து வைத்தல், பட்டாசு வெடிகளைப் பயன்படுத்துதல் என இதுபோன்ற செயல்களைச் செய்து யானைகளின் வழிப்பாதையை விவசாயிகள் அழிக்க முயன்று வருகின்றனர்.*

*மேற்கண்ட குறிப்பின் வழி காடுகளை ஒட்டி வாழும் மக்கள் தங்களைப் பாதுகாக்கச் செய்யும் முயற்சிகளால் காட்டையே நம்பி வாழும் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு சூழலியல் மாறிவருவதை அறியமுடிகிறது.*

**யானைகள் பாதிப்படைதல்**

*பல யானைகள் மின்வேலிகளில் உள்ள மின்சாரம் பாய்ந்து இறக்கின்றன. இன்னும் சில, திண்பண்டங்களில் வைக்கப்பட்ட விஷமருந்துகளால் கொல்லப்படுகின்றன. மிகுந்த வெடி சத்தத்தால் பெண் யானைகளின் கர்ப்பம் கலைகின்றது. யானைகளின் வழித்தடங்களில் ரயில் பாதைகள் அமைக்கப்படுவதால், ரயில் மோதி பல யானைகள் இறக்கின்றன. இது போன்று எண்ணற்ற காரணங்களால் இறக்கின்ற நிகழ்வுகள் தொடர்கதையாகவே உள்ளன. மனிதர்கள் உயிர்நேயம் இல்லாமல் பல செயல்களை மேற்கொண்டு வருகின்றனர்.*

**அரிசிக் கொம்பன்**

*தற்போது தமிழக மக்கள் பலராலும் பேசப்படுகின்ற யானை. ''அரிசிக் கொம்பன்''. அந்த யானை காட்டிலிருந்து பிரிந்து மக்களின் குடியிருப்பு பகுதிக்கு வந்துவிட்டது. அந்த யானை அரிசியை விரும்பி உண்பதால், அதற்கு இப்பெயர் ஏற்பட்டது என்கின்றனர். அரிசிக் கொம்பனால் சிலர் கொல்லப்பட்டும் உள்ளனர். ஆனால், இந்த யானை உணவுக்காகவே இப்படி செய்வதாகக் கூறுகின்றனர். அரிசி கொம்பன் யானையை உரிய வகையில் பக்குவப்படுத்தினால், அது நல்ல பாசமாக இருக்கும் என்பதுதான் வனவிலங்கு ஆர்வலர்களின் கருத்தாகும். (மாலை மலர் 03/06/2023) என்ற நாளிதழ் செய்தி வழி யானைகள் தம் இயல்பான உணவுப்பழக்கத்தை மாற்றிக்கொள்ள மனிதர்கள் காரணமாகின்றனர்என்பது பெறப்படுகிறது.*

**கும்கி யானைகள்**

*மக்களுக்குகாட்டுயானைகளால்ஏற்படும்பாதிப்புக்களைத்தடுக்கபழக்கப்படுத்தப்பட்ட கும்கி யானைகள் பயன்படுத்தப்படுகின்றன. இது பற்றி புதினஆசிரியர், கும்கி யானையின் பெயர் ''சலீம்''. இந்த யானை காங்கேயம் காளை போல அழகு மிக்கது. முன்னங்கால் பனைமரம் போன்றவை, யானை என்றால் கருப்பு என்று சலீமைப் பார்த்தால் தான் சொல்ல முடியும். முப்பத்தொன்பது வயதாகும் சலீம், காட்டு யானைகளை விரட்டுவதற்காகவே பிரத் தியேகமாக வனத்துறையினரால் பயிற்சி அளிக்கப்பட்டு வரும் யானையாகும். இதுபோன்று பல கும்கி யானைகளுக்கு வனத்துறையினரால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது எனக் குறிப்பிடுவதன் வாயிலாக மக்களை அச்சுறுத்தும் காட்டு யானைகளை கும்கி யானைகள் கட்டுப்படுத்தி காட்டிற்குள் விரட்டியடிப்பதை கடந்த காலங்களில் நாம் அறிந்ததே.*

**யானைகளின் ஒற்றுமை**

*இந்நாவலில் ஆசிரியர் யானையின் ஒவ்வொரு அசைவுகளையும், அதன் மனவோட்டத்தையும் உள்ளது உள்ளவாறு அழகாக எடுத்துரைக்கிறார். ஒரு யானை மின்சாரம் பாய்ந்து இறந்ததால்,*

*அதனுடன் வந்த மற்ற யானைகள், கூட்டம் கூடி சிறிது நேரம் நின்று கண்ணீர் வடித்து சென்ற செய்தி மனதை உலுக்குகிறது. இதுபோன்று இன்னொரு நிகழ்வும் இந்நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இரு யானைகளின் பாசப் போராட்டமே. இறந்தபோன தன் தாய் யானையின் அருகில் இருந்து பிரிய மனமில்லாது, கண்ணீர் வடித்து நின்ற குட்டியானையின் மனக்குமுறலும் நம் மனதை வாட்டுகிறது. அந்த குட்டி யானையைத் தாய் யானையிடமிருந்து விலக்க வந்த கும்கி யானையின் மன வேதனையும் நாவலில் இடம்பெற்றுள்ளது.*

**முதுவர்கள்**

*தமிழகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் பலவேறுபட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடிகள் என்பவர்தொன்றுதொட்டு நீண்டகாலமாக ஒரே இடத்தில் வாழ்ந்து வருபவர்களாவர். தமிழகத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் புதினக்களமாக அமைந்துள்ள பகுதியை ஒட்டி இருளர், காடர், தோடர்போன்றோர் வாழ்ந்து வருகின்றனர். இங்கு புதின ஆசிரியர்முதுவர்இன மக்கள் வாழ்வியல் குறித்து வெளிப்படுத்தியுள்ளார்.*

*முதுவர் எனப்படுவோர் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் வாழ்கிற ஒரு பழங்குடியினர் ஆவர். இவர்களில் திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலுள்ள மலைப்பகுதிகளில் வசிப்பவர்கள் பாண்டிய நாட்டுத் தமிழர்எனச் சொல்லிக் கொள்கிறார்கள். வேட்டையாடுவதிலும் கம்பு, கேழ்வரகு, ஏலக்காய் ஆகியவற்றைப் பயிர் செய்வதிலும் தேர்ந்தவர்கள். இவர்கள் பேசும் மொழி பேச்சுத் தமிழின் கிளை மொழிகளுள் ஒன்றாக உள்ளது* (https://shorturl.at/koD57)

*முதுவர் இன மக்கள் மலைப் பகுதிகளில் வசிப்பவர்கள். முதுவர்கள் பற்றிய பல செய்திகள் இந்த நாவலில் இடம்பெற்றுள்ளது. முதுவர் இன மக்கள் மூலிகைகளைக் கொண்டு வைத்தியம் பார்ப்பதில் வல்லவர்கள். சிலர் தோட்ட வேலைக்கும் செல்வர். இந்த நாவலில் குறிப்பிடப்படும் ''சின்னய்யா'' என்ற முதுவர் அனைவராலும் மதிக்கப்படுபவர். இவருடைய இயற்பெயர் சாமனன். அரிய வகை நோய்களாக இருப்பினும், அதனை மூலிகைகள் கொண்டு தீர்க்கும் திறன் இவர்களிடம் உள்ளது என்ற கருத்தின் வழி முதுவர்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.*

**முதுவர்களின் வாழ்க்கை முறை**

*முதுவர்கள் காலங்காலமாக மலைப் பகுதிகளில் வசித்து வரும் மலைவாசிகளே. முதுவர்கள் ஓலைகள் வேயப்பட்ட வீடுகளிலும், குடிசை வீடுகளிலும் வசிப்பர். அனைவர் வீட்டிலும் லாந்தர் விளக்கு, மூங்கில் குடுவை, ஈச்ச ஓலையால் பின்னப்பட்ட தாங்கல், உலக்கை, ஈச்சங்கூடை, கொடுவாள், கோடாலி, மண் பானைகள், தினையை போட்டு கொற்ற குந்தாணி, அம்மி, சிறு முரசு போன்றவை இருக்கும். முதுவர்களின் வாழ்க்கை முறைக்கும் பிற மக்களின் வாழ்க்கை முறைக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருக்கின்றன.*

**முதுவர்களின் மூலிகை வைத்தியம்**

*முதுவர்கள் மலைப்பகுதிகளில் கிடைக்கும் பல்வேறு மூலிகை இலைகளைக் கொண்டு மருந்து தயாரித்து நோய்களைத் தீர்க்கப் பயன்படுத்துவர். இவ்வாறான வைத்திய முறையை ''மலை மருந்து வைத்தியம்'' என்கின்றனர்.*

*தோல் நோய்க்கு தும்பைச் செடி இலைகளை அரைத்து அதனுடன் ஆட்டுப்பால் கலக்கிய கலவையைப் பயன்படுத்துவர். தொரக்கோல் செடி மற்றும் முள்ளிச்செடியை தீயில் வாட்டி, மண் சட்டியில் வறுத்து, அதை கல்லில் இட்டுப் பொடியாக்கி அதனோடு வெள்ளாட்டு சிறுநீரை ஊற்றி தோல் மீது பற்றுப் போடுவர்.*

*இதுபோன்று மலைப்பகுதிகளில் இயற்கையாகவே கிடைக்கும் பல மூலிகைகளைக் கொண்டு அங்குள்ளவர்கள் நோயில்லாமலும், நோய் உள்ளோரை சரி செய்தும் வாழ்ந்து வருகின்றனர்.*

**முதுவர்களின் உணவு முறை**

*பெரும்பாலும் முதுவர்கள் மலைப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய இயற்கையான உணவு வகைகளையே உண்டு வாழ்வர். அவர்கள் மிகவும் விரும்பி உண்ணக்கூடிய உணவு வள்ளி கிழங்கு. அதனை வேகவைத்து அதோடு தேன் கலந்து உண்பர். இது மட்டுமல்லாது அங்கு விளைகின்ற குதிரைவாலி அரிசியுடன் பிரண்டை குழம்பு அல்லது மீன் குழம்பு சேர்த்து உண்பர். அத்தோடு தாம் வேட்டையாடிய விலங்குகளையும் சமைத்து உண்பர்.*

**முதுவர்களின் தெய்வ வழிபாடு**

*முதுவர்கள் தங்களுக்கு வாழ்வு கொடுக்கின்ற மலையையே தெய்வமாக வணங்குவர். தேவன் பொன்னும் பொருளும் கொடுத்தும் முதுவர்கள் அதை வேண்டாம் என்று கருதி, "தேவனே உழைக்காது எந்த பொருளையும் எங்கள் வசி ஏற்காது. உழைத்து பெற நல்ல உடல் இருக்கிறது, காப்பதற்கு மலை அடுக்கு இருக்கிறது, கனியும் கிழங்கும் தர காடு இருக்கிறது, கையில் வசியும் கொடுவாளும் இருக்கிறது, இந்தப் பொன்னையும் பொருளையும் வைத்து என்ன செய்ய? பசி ஆறுமா? இதோ இந்த வனாந்தரம் போதும்" என்று தேவன் தந்ததை அங்கேயே போட்டுவிட்டு வந்து விட்டனர், என்ற செய்தி இந்த நாவலில் இடம்பெற்றுள்ளது. முதுவர்கள் மலையையே உண்மையான தெய்வமாக எண்ணி வணங்கினர்.*

**மலைவாழ் குழந்தைகளின் நிலை**

*மலைவாழ் குழந்தைகளின் வாழ்க்கை மிகவும் வித்தியாசமானது. நமக்கு கிடைக்காத பல சுவாரஸ்ய நிகழ்வுகள் அந்தக் குழந்தைகளுக்கு கிடைக்கும். முதுவர்களின் குழந்தைகள் ஒரு கூட்டமாக சேர்ந்து தினந்தோறும் மலைப்பகுதியில் விளையாடுவர். மலைப்பகுதியில் கிடைக்கக்கூடிய பழங்களை பறித்து உண்பர், அத்தோடு மழை உச்சியில் இருக்கும் தேனையும் எடுத்து உண்பர். அருவிகளில் நீராடி மகிழ்வர். பல்வேறு வகையான மலர்களைச் சூடி மகிழ்வர். ஆனால் மலைவாழ் குழந்தைகளுக்கு கல்வி வசதி கிடைப்பதில்லை. மலைவாழ் குழந்தைகளின் கல்வி ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கைப் பெற்ற போதிலும் போதிய வாய்ப்புகள் கிடைக்காமை வருந்தத்தக்கது.*

**மலையின் வளமும் சிறப்பும்**

*பெரிய மலையில் தான் யானைகள் வாழ்கின்றன. மலைகளில் அனைத்து உயிர்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் கிடைக்கிறது. ஆனால், இன்று மலை காய்ந்து ஒரு சில இடத்தில் தான் பசுமை இருக்கிறது. மலையில் மிகப் பழமையான மரங்கள் மற்றும் செடி கொடிகளை காண முடிகிறது. பல்வேறு அரிய வகைத் தாவரங்கள் மலைப் பகுதியில்*

*கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக அலரி மரம், காரமுள் செடி, சீங்கமுள் செடி, அத்திமரம் போன்ற பல்வேறு மரம் மற்றும் செடி கொடிகள் மலையில் உள்ளன. அத்தோடு பல நீர்வீழ்ச்சிகளும் ஓடைகளும் மலைப்பகுதியில் காண முடிகிறது.*

**இயற்கை வருணனைகள்**

*“கனத்திருக்கிறது காடு. அருவியின் பேரோசை கேட்கிறது. எங்கிருந்தோ ஈரத்தை அள்ளி அள்ளி வந்து தழுவுகிறது. காற்று கொண்டு செல்லும் ஈரப்புகையை, மரம் செடி கொடிகளில் பூசுகிறது. ஓசையிட்டோடும் பேராற்றின் கரையோரம் யானைகள் வருகின்றன. கொட்டும் அகன்ற அருவி மரங்கள் இடையே தெரிகிறது. குறுகிய பகுதியில் ஆறு கற்களை உருட்டிக் கொண்டு செல்கிறது. காற்று ஆற்றின் பள்ளத்தாக்கில் விழுந்து அருவியின் வெண்நீர்ப் புகையை மரங்களிடையே சலசலவென இறைத்து கொண்டு செல்கிறது. பெரிய பெரிய வேர்கள் எட்டி விழும் நீரில் பளபளத்தபடி இருக்கின்றன. வானம் மேகங்களை சுழட்டுகிறது. இருபுற மலைமுகடுகளின் இடையில் வானத்து அருவியாக மேகம் இறங்கி, மழையாகக் கொட்டியது. பெருமழை நின்றபின் வெண்பொதிகள் உயர்ந்த மலை குன்றுகள் எங்கும் பற்றிப் பறக்கின்றன. கிழக்கில் இருக்கும் சிகரத்தில் பால்மேகம் பொங்கி வழிந்து வழிந்து மலையை மூட முடியாமல் தவிக்கிறது”, என்று காட்டின் இயற்கை வருணனைகளை வெளிப்படுத்தியுள்ளார்.*

**முடிவுரை**

*சூழலியல் மற்றும் அதன் இயல்புகள் குறித்தும் பறவை, விலங்குகளின் இடநகர்வான வலசை பற்றியும் அறிந்துகொள்ளமுடிகின்றது. யானைகளின் பழக்கவழக்கம், உணவுமுறை யானைகளால்காடுகள்அடையும்நன்மை குறித்தும் மனிதனின் தேவை அதிகரிப்பால் அவற்றின் வலசைப்பாதைகள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி உள்ளதையும் அறிந்துகொள்ளமுடிகின்றது. யானைகளின் பாதை மறிக்கப்பட்டு விவசாயநிலங்கள் உருவாக்கப்பட்டதால் நிகழும் மனித விலங்கு மோதல்கள் பற்றிக் காணமுடிகின்றது. இயற்கையாக வாழும் இடத்தை மனிதன் எடுத்துக்கொண்டு தன்னைப் பாதுகாப்பதாக நினைத்து விலங்குகளுக்குத் தரும் இன்னல்களால் இயற்கைப் பாதிக்கப்பட்டு விலங்குகளும் சுற்றுச்சூழலும் தன்நிலையிலிருந்து மாறியுள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது, பண்டைய காலத்தொட்டு வாழ்ந்து வருகின்ற பழங்குடியினர்குறித்தும் இப்புதினத்தில் இடம்பெறும் முதுவர்கள் குறித்தும் அவர்தம் வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. புதினத்தில் இடம்பெற்றுள்ள சின்னையா பாத்திரம் மருத்துவ அறிவு நிறைந்திருப்பவராக உள்ளது முதுவர்களின் அனுபவத்தையும. அறிவாற்றலையும் வெளிப்படுத்துகிறது. முதுவர்களின் உணவுமுறை, வழிபாட்டு முறை, கல்விநிலை அவர்கள் வாழும் மலையின் இயல்புகள் ஆகியன குறித்தும் அறிந்து கொள்ளமுடிந்தது.*

**பயன்பட்ட நூல்கள்**


1. *சு.வேணுகோபால், வலசை, முதற்பதிப்பு, தமிழினி, சென்னை-2019*
2. *மு.வ., திருக்குறள் விளக்கம்*
3. *தி இந்து தமிழிசை நாளிதழ், இந்து குழுமம், சென்னை.*
4. *மாலைமலர், நாளிதழ், சென்னை*
5. *தமிழ்பேச்சு எங்கள் மூச்சு, விஜய் தொலைக்காட்சி, சென்னை*
6. *விக்கிபீடியா இணையதளம்*

**References**

1. Venugopal, S.,  Valasai, 1st Edition, Thamizhini, Chennai, 2019.
2. M.V.E. Thirukkural Explanation.
3. The Hindu Tamilisai Daily, Hindu Group, Chennai.
4. Malai Malar, Daily, Chennai.
5. Tamil Speaking Our Breath, Vijay TV, Chennai.